**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

Calendar Case No: CC. 280/2020

DEPOSITION OF WITNESS for Prosecution **அ.சா.1**

Name : **திருமதி. மகாலட்சுமி**

Father's Name/Husband Name **திரு. இளங்கோவன்**

Village : அத்தியூர்

Taluk : **குன்னம்**

Age : 37/ 2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.))**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ப.சா.2 இளங்கோவன் எனது கணவர். 1வது ராதாகிருஷ்ணன் என்னுடைய கொழுந்தனார். 2வது எதிரி பிரபாகரன் எனது கொழுந்தனாரின் மகன். வழக்கு சம்பவம் நடந்து சுமார் 5 வருடங்கள் இருக்கும். கடந்த 2019ம் வருடம் 1வது மாதம் சம்பவம் நடந்தது. தேதி ஞாபகமில்லை. வழக்கு சம்பவம் நடந்தபொழுது நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தோம். எங்கள் வீட்டிற்கு பின்புறம் காலை சுமார் 11 மணியளவில் எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டிற்கு பின்புறமாக வந்து தேவையில்லாமல் பேசினார்கள். இடப்பிரச்சனை சம்மந்தமாக தேவையில்லாமல் திட்டிக்கொண்டிருந்தனர். ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரிகள் இருவரும் அசிங்கமாக பேசினார்கள். தேவிடியா என்று கொச்சையாக பேசினார்கள். எதிரிகள் அவ்வாறு பேசியது எனக்கு மிகவும் மனது கஷ்டமாக இருந்தது. எனது கணவரும் வந்து கேட்டார். என்னை என் கொழுந்தனார் ராதாகிருஷ்ணன் இரும்பு

கம்பியால் என் தலையில் இடது பக்க நெற்றியில் அடித்தார். 1ம் எதிரியின் மகன் பிரபாகரன் என்னை அசிங்கமாக பேசினார். எனது கணவரின் இரண்டு எதிரிகளும் பெரிய இரும்பு கம்பியால் கீழே தள்ளிவிட்டு, மாறி மாறி இரும்பு கம்பியால் அடித்தார்கள். எனது கணவருக்கு கீழ் உதட்டிலிருந்து முகத்தின் கீழ் தாடை வரையிலும், கை மற்றும் கால்களிலும் காயம் ஏற்பட்டது. நான் மயங்கிவிட்டேன். என் கணவர் என்னை அத்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பார்க்க இயலாது என்று சொன்னதால் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக சென்றோம். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையிலிருக்கும்போது போலிசார் வழக்கு சம்பவம் குறித்து என்னை விசாரித்தனர். போலிசாரிடம் சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளின் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.